Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.115/2016

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : அருண்பாண்டியன் | Father/Husband Name | : ஜெயராமன் |
| Calling | : | Age | : |
| Date | : 23.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுதாமரைப்பட்டியில் குடியிருந்து கொண்டு பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் பாபு, ராஜ்பாண்டி ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி ஜெயராமன் எனது அப்பா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சுமார் 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 7மணியளவில் நானும், எதிரி பிரேம் ஆனந்த் என்பவரும் புதுதாமரைப்பட்டி பஸ் ஸ்டாண்ட் அருகே நின்றுகொண்டிருந்தபோது எங்களுக்கு இடையே வாய்தகராறு ஏற்பட்டது. நாங்கள் தற்போது சமரசமாக சென்றுவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் அ.சா.1–ஐ பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அ.சா.1–ஐ பிறழ் சாட்சியாக**

**அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் அ.சா.1—ஐ குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

நாங்கள் இவ்வழக்கில் சமாதானமாக சென்று சமாதான மனு செய்துள்ளோம் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் கடந்த 28.01.2016—ம் தேதி இரவு 9.00 மணியளவில் எங்கள் ஊர் பஸ் ஸ்டாப் அருகே சாட்சி பாபு என்பவர் வடை கடைக்கு சென்றபோது அங்கு வந்த ஆஜர் எதிரி பாபுவுடன் ஏற்கனவே உள்ள பாக்கி சம்மந்தமாக பிரச்சனை செய்தார் என்றும், அதை கேட்ட என்மீது விரோதம் கொண்டு கடை அருகே கிடந்த விறகு கட்டையை எடுத்து தாக்கினார் என்றும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என வாக்குமூலம் அளித்துவிட்டு எதிரியுடன் சமரசமாக சென்று நடந்த உண்மைகளை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.